# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - ஜனவரி 2018

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

**1**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ..........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | .................................... பெயர் .................................... ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (....................................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன். | .................................... பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .................................... பெயர் .................................... ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன். | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

✣ **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

**01)** ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்களின் கல்வியில் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்கள் போல் போற்றுவது எமது கடமை. எனவே நூல் நிலையங்கள் முதலியவற்றில் காணப்படும் நூல் களைக் கிழிக்காமல் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

✣ **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

*01)* ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது?

..............................................................................................................................................

*02)* “விழிகள்” என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

..............................................................................................................................................

*03)* “சிறுமை” என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

..............................................................................................................................................

*04)* “கவனமாக” என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

..............................................................................................................................................

*05)* “அங்குள்ளவர்களின்” என்பதைப் பிரித்து எழுதுக.

..............................................................................................................................................

*06.* தன்மைப் பன்மை வினைச் சொல்லினை எழுதுக.

..............................................................................................................................................

(6 x 1 = 6 புள்ளிகள்)

**02)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

*1)* சிறந்த ................................. (நூல் / நூல்கள்) நல்ல நண்பனைப் போன்றது.

*2)* எமது ............................ (கவலையீனம் / கவனயீனம்) காரணமாகவே விபத்துக்கள் ஏற்படு கின்றன.

(2 x 1 = 2 புள்ளிகள்)

**03)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லினை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

*1)* நாம் அனைவரும் பேருந்தில் கதிர்காமத்துக்குப் .............................. (போனோம் / போவேன்).

*2)* காகம் முட்டைகளிட்டுக் குஞ்சுகள் ...................................... (பொரித்தன / பொரித்தது)

*3)* பூக்கள் .................................... (மலர்ந்தது / மலர்ந்தன)

*4)* காற்று வீசியதால் மரங்கள் ................................. (முறிந்தது / முறிந்தன)

(4 x 1 = 4 புள்ளிகள்)

**04)** **சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

*1)* நாகரிகம் / நாகரீகம்

*2)* கோடாலி / கோடரி

(2 x 1 = 2 புள்ளிகள்)

**05)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

*1)* பன்றி உறுமும் என்பது போல நாய் .......................................................

(1 புள்ளி)

**06) கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதி பழமொழியைப் பூரணப்படுத்துக.**

1) ................................................................ செய்பவர் படாது படுவார். (1 புள்ளி)

**07) கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

**"கண்ணன்" என்றே கையெழுத்தைப்**

**.....................................................**

**கடிதம் அதனை உறைக்குள் வைத்துக்**

**கருத்தாய் ஒட்டுவேன்.**

(1 புள்ளி)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா பாபு வேலை செய்ய வந்துவிட்டான் (1 புள்ளி)

**09) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

வீண் செலவு செய்பவன் - ....................................................... (1 புள்ளி)

**10) கீழே தரப்பட்டுள்ள பெண்பால் சொல்லுக்குப் பொருத்தமான ஆண்பால் சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) பேர்த்தி - .......................................................

2) மருத்துவிச்சி - .......................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.**

1) முயல் - .......................................................

2) வைத்தியசாலை - .......................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**12) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. Please give me a .................................... (book / books)
2. This ...................... (is / are) my bag.

(2 x 1 = 2 புள்ளிகள்)

**13) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் ......................................................................... (1 புள்ளி)

**14) பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.**

மதுருவா ................................................................ (1 புள்ளி)

**15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.**

அதிபர் வருவாரா? ................................................................ (1 புள்ளி)

**16)** **“காலைக் காட்சி” என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**
**(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெறுவதுடன் எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)**

*1)* ..................................................................................................................................

..................................................................................................................................

*2)* ..................................................................................................................................

..................................................................................................................................


*3)* ..................................................................................................................................

..................................................................................................................................

*(3 x 2 = 6 புள்ளிகள்)*

✧ **தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் விடைகளை எழுதுக.**

**17)** எண்சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.




.....................................

*(2 புள்ளிகள்)*

**18)** வட்டத்தில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க

1 9
7 0

*1)* மிகப் பெரிய எண் ..................................

*2)* மிகச் சிறிய எண் ................................

*(2 x 2 = 4 புள்ளிகள்)*

**19)** *1)* தரப்பட்டுள்ள உரோமன் எண்ணிற்கு அடுத்து வரும் உரோமன் எண்ணை எழுதுக.

v ............

*2)* தரப்பட்டுள்ள உரோமன் எண்களைக் கூட்டி வரும் உரோமன் எண்ணை எழுதுக.

x + ix = .........................

*(2 x 1 = 2 புள்ளிகள்)*


**20)** **தரப்பட்டுள்ள எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.**

*1)* 1, 4, 9, 16, ............ *2)* 27, 23, 19, 15, ............

*(2 x 1 = 2 புள்ளிகள்)*

**21)** 150 பென்சில்களை 7 பேர்களிடையே சமமாகப் பங்கிடும் போது எஞ்சும் பென்சில்களின் எண்ணிக்கை யாது? .................................................

*(2 புள்ளிகள்)*

22) 

இவ்வுருவிற்கு எத்தனை சமச்சீர்க் கோடுகளை வரையலாம்?


.................................. (2 புள்ளிகள்)

23) மூன்று தோடம்பழங்களின் விலை ரூபாய் 100.00 ஆகும். 9 தோடம்பழங்களின் விலை யாது?

.................................. (2 புள்ளிகள்)

24) பிஸ்கட் பக்கற் ஒன்றின் நிறை 425g ஆகும். அவ்வாறான 9 பக்கற்களின் நிறை யாது?

............kg............g (2 புள்ளிகள்)

25) 

உருவில் நிறந்தீட்டப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணில் எழுதுக.


.................................. (2 புள்ளிகள்)

26) ஒரு பிள்ளை P என்னும் இடத்திலிருந்து 10m கிழக்கே செல்கிறது. பின்னர் அது அவ்விடத்திலிருந்து 10m தெற்கேயும் பின்னர் அவ்விடத்திலிருந்து 10m மேற்கு நோக்கிச் சென்று, Q என்னும் இடத்தில் நிற்கின்றது. Q இற்கு எத்திசையில் P அமைந்துள்ளது?

. ........................................................ (2 புள்ளிகள்).

27) 5 லீற்றர் பெற்றோலை நிரப்பிக் கொண்ட வாகனம் ஒன்று 144 கிலோமீற்றர் தூரம் பயணித்த பின்னர் வாகனத்தின் தாங்கியில் 2 லீற்றர் பெற்றோல் எஞ்சியிருந்தது. வாகனம் தொடர்ந்தும் அதே கதியில் சென்றால் மேலும் எத்தனை கிலோமீற்றர் தூரம் பயணிக்க முடியும்?

.................................. (2 புள்ளிகள்)

28) 


1) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

....................................................................

2) இவ்வுருவின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன?

..........................................

(2 x 2 = 4 புள்ளிகள்)

29) ஒரு கடையில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியலின் ஒரு பகுதி கீழே காணப்படுகிறது.

| | |
|---|---|
| ஒரு கொப்பி | ரூபாய் 30.00 |
| ஒரு பேனா | ரூபாய் 25.00 |
| ஒரு அடிமட்டம் | ரூபாய் 13.00 |
| ஒரு பென்சில் | ரூபாய் 10.00 |

விலைப்பட்டியலிற்கேற்ப பின்வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.


| பொருட்கள் | எண்ணிக்கை | பணம் | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| கொப்பி | 4 | 120 | 00 |
| அடிமட்டம் | 3 | ........... | ........... |
| பேனை | ............... | 175 | 00 |
| பென்சில் | 9 | 90 | 00 |

(2 x 2 = 4 புள்ளிகள்)

**30)** 1) வரைபில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.

2) அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூரணப்படுத்துக.

| பழவகை | பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அன்னாசி | 10 |
| மாம்பழம் | 14 |
| தோடம்பழம் | ............... |
| கொய்யாப்பழம் | 6 |




(2 x 2 =4 புள்ளிகள்)

✣ **31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.**

**31)** நான்கு இதழ்கள் உள்ள மலருக்கு உதாரணம்
1) மல்லிகை 2) காட்டு மல்லிகை 3) பவள மல்லிகை 4) வெட்சி

**32)** தனது வீடாகப் புற்றை அமைக்கும் விலங்கு யாது?
1) பாம்பு 2) தேனீ 3) கறையான் 4) தேள்

**33)** ஆண்டின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மாத்திரம் காய்க்கும் தாவரங்கள்
1) வாழை, கொய்யா 2) கொய்யா, பப்பாசி
3) பாலை, றம்புட்டான் 4) பப்பாசி, வாழை

**34)** துப்புரவற்ற நீரைப் பருகுவதனால் பீடிக்கும் நோய்
1) செங்கண்மாரி 2) தடிமன் 3) குக்கல் 4) கூகைக்கட்டு

**35)** பின்வரும் பிராணிகளுள் ஊர்வன அல்லாதது
1) ஆமை 2) தவளை 3) உடும்பு 4) பாம்பு

**36)** பச்சையாக வெட்டிய எம் மரக்கறித் துண்டுகள் சிலவற்றைப் பாத்திரத்தில் உள்ள நீரில் இடும் போது அந்நீரின் நிறத்தை மாற்றக் கூடிய மரக்கறி
1) கரட் 2) கத்திரிக்காய் 3) பீற்றூட் 4) பூசணிக்காய்

**37)** இலங்கையில் அதிக மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம்
3) மேல் மாகாணம் 4) வடமத்திய மாகாணம்

**38)** மேசன் பயன்படுத்தும் உபகரணம்,
1) துறப்பணம் 2) தூக்குக்குண்டு 3) அரம் 4) வரைகம்பு

**39)** காந்தம் கவரும் பொருட்கள் மாத்திரம் அடங்கிய விடை

1) அலுமினியம், உருக்கு
2) உருக்கு, இரும்பு
3) பித்தளை, நிக்கல்
4) குரோமியம், இறப்பர்

**40)** பின்வரும் உணவுகளில் சக்தி தரும் உணவு எது?

1) பசளி
2) இறைச்சி
3) தோடம்பழம்
4) கருப்பட்டி

**41)** நுளம்புகள் பெரும்பாலும் எவ்வேளைகளில் வீட்டிற்குள் நுழைகின்றன?

1) காலை
2) மாலை
3) நண்பகல்
4) இரவு

**42)** மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டு ஒழுங்குமுறையில் இரண்டாவது படிநிலை

1) மனதைத் தளர்த்துதல்
2) பிரார்த்தனை
3) உடலைத் தளர்த்துதல்
4) உதிப்பு


**43)** மரக்கிளைகள் விதானம் போன்று (குடை போன்று) அமைந்திருப்பதால் ஏற்படும் நன்மை எது?

1) மண்ணரிப்பு ஏற்படும்.
2) மண்ணிற்குரிய ஒளி கிடைக்காது.
3) மண்ணரிப்பு தடுக்கப்படும்.
3) மண்வளம் குன்றும்

**44)** வான வில்லில் உள்ள ஏழு நிறங்களாக அமைவது

1) சிவப்பு, நீலம், ஊதா, மஞ்சள், பச்சை, செம்மஞ்சள், கறுப்பு
2) ஊதா சிவப்பு, கருநீலம், மஞ்சள், பச்சை, நீலம், செம்மஞ்சள்
3) சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம், கறுப்பு, வெள்ளை
4) நீலம், ஊதா, மஞ்சள், சிவப்பு, பச்சை, இளநீலம், செம்மஞ்சள்

**45)** இவ் உபகரணத்தின் பெயர்



1) ஒற்றைச்சில்லு வண்டி
2) விளையாட்டு வண்டி
3) சுற்றும் வண்டி
4) சுழல் வண்டி

**46)** ஆரோக்கியமான வித்தொன்று முளைப்பதற்கு அவசியமான காரணிகள் மூன்றையும் உள்ளடக்கிய விடை

1) சூரியஒளி, வெப்பம், வளி
2) தகுந்த வெப்பம், வளி, நீர்
3) நீர், சூரியஒளி, வளி
4) பசளை, மண், சூரியஒளி

**47)** மஞ்சள் நிறத்தையும் நீலநிறத்தையும் கலக்கும் போது உண்டாகும் நிறம்?

1) கபிலம்
2) செம்மஞ்சள்
3) பச்சை
4) ஊதா

**48)** ஒலிம்பிக் கொடியின் பின்னணி நிறம் யாது?

1) வெள்ளை
2) சிவப்பு
3) மஞ்சள்
4) இளஞ்சிவப்பு

**49)** சக்தி குறைவாக விரயமாகும் விளையாட்டு எது?

1) கயிறிழுத்தல்
2) தாயம்
3) ஓடுதல்
4) பாரந் தூக்குதல்

**50)** சர்வதேச புத்தக தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

1) ஏப்ரல் 22
2) ஏப்ரல் 23
3) மார்ச் 8
4) மார்ச் 14

**51)** இலங்கையிலுள்ள இயற்கைத் துறைமுகம் எது?

1) காலி 2) கொழும்பு 3) திருகோணமலை 4) அம்பாந்தோட்டை

**52)** வெள்ளை நிறக்குருதியை உடைய பிராணி எது?

1) வெட்டுக்கிளி 2) இறால் 3) கிளி 4) வண்ணாத்துப்பூச்சி

**53)** இலங்கையின் தேசிய மலர் எது?

1) அல்லி 2) நீல அல்லி 3) தாமரை 4) கார்த்திகைப் பூ


**54)** நாற்று மேடைகளில் விதைகளை இட்டு முளைக்கச் செய்தபின் கன்றுகள் பெறப்படும் தாவரம் எது?

1) வெண்டி 2) கோவா 3) பூசணி 4) வல்லாரை

**55)** வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்த உண்ணப்படும் பழம்,

1) பப்பாசிப்பழம் 2) வாழைப்பழம் 3) வில்வித்திரியம்பழம் 4) மாம்பழம்

**56)** வானவில்லின் நிறங்களை அறிய உருவாக்கப்பட்ட முறை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அதில் A, B, C முறையே வரும் விடையைத் தெரிவு செய்க.




1) கண்ணாடி, திரை, நீர்
2) கண்ணாடி, சூரியஒளி, நீர்
3) முகம்பார்க்கும் கண்ணாடி, சுவர், சவர்க்காரக் கரைசல்
4) முகம் பார்க்கும் கண்ணாடி, திரை, நீர்

**57)** இரு சமாந்தர தளவாடிக்கு மத்தியில் பொருள் ஒன்றை வைக்கும் போது தோன்றும் விம்பங்களின் எண்ணிக்கை யாது?

1) இரண்டு 2) மூன்று 3) பல 4) ஒன்று

**58)** தாவரக்கொழுப்பு உணவாக அமையும் உணவு எது?

1) பட்டர் 2) மாஜரின் 3) பாற்கட்டி 4) நெய்

**59)** நீரில் அமிழக் கூடிய திரவப்பொருட்கள் அமையும் விடையைத் தெரிவு செய்க.

1) பால், இளநீர் 2) பெற்றோல், டீசல்
3) மண்ணெண்ணெய், டீசல் 4) இரசம், கிளிசரின்

**60)** இலங்கையின் தேசிய மரத்தின் பூவின் நிறம் எது?

1) வெள்ளை 2) நீலம் 3) இளஞ்சிவப்பு 4) ஊதா

(30 x 1 = 30 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 01 இன் விடைகள்

**தரம் - 05** ❶ **வினாத்தாள் - II**

01. 1) கல்வியில் / கல்வி / நாட்டு மக்களின் கல்வியில் / அங்குள்ளவர்களின் கல்வியில் / கல்வியில் தங்கியுள்ளது.
    2) கண்கள் 3) பெருமை 4) பக்குவமாக
    5) அங்கு + உள்ளவர்களின் 6) பயன்படுத்துவோம்
02. 1) நூல் 2) கவனயீனம்
03. 1) போனோம் 2) பொரித்தது 3) மலர்ந்தன 4) முறிந்தன
04. 1) நாகரிகம் 2) கோடரி
05. குரைக்கும்
06. அடாது
07. போட்டு நானுமே,
08. ஐயா, பாபு வேலை செய்ய வந்துவிட்டான்.
09. ஊதாரி
10. 1) பேரன் 2) மருத்துவன்
11. 1) Rabbit 2) Hospital
12. 1) book 2) is
13. I am sorry
14. நுளம்பு
15. விதுகல்பதி எய்த? / விதுகல்பதி எய்(யி)த?
    விது ஹல்பதி எய்த? / விதுஹல்பதி எய்(யி)த?
    விது ஹல்பதிதுமா எய்த? / விதுஹல்பதிமா எய்(யி)த?
16. பொருத்தமான வாக்கியங்கள் எழுதி இருப்பின் புள்ளி வழங்குக.
17. 1305
18. 1) 9710 2) 1079
19. 1) vi 2) xix
20. 1) 25 2) 11
21. 3 / மூன்று
22. 1 / ஒன்று
23. ரூபாய் 300.00
24. 3kg 825g (kg g இட்டால் புள்ளி வழங்க வேண்டாம்.)
25. 0.5
26. வடக்கு
27. 96km
28. 1) 16cm 2) 6
29. 1)

| ரூபாய் | சதம் |
|---|---|
| 39 | 00 |

2) 7

30. 1) 7
    2) வரைபில் வரையறுத்து நிழற்றி இருப்பின் மாத்திரம் புள்ளி வழங்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| 31) 4 | 32) 3 | 33) 3 | 34) 1 | 35) 2 |
| 36) 3 | 37) 1 | 38) 2 | 39) 2 | 40) 4 |
| 41) 2 | 42) 1 | 43) 3 | 44) 2 | 45) 4 |
| 46) 2 | 47) 3 | 48) 1 | 49) 2 | 50) 2 |
| 51) 3 | 52) 4 | 53) 1 | 54) 2 | 55) 3 |
| 56) 4 | 57) 3 | 58) 2 | 59) 4 | 60) 1 |